உற்பத்தி செய்பவர்களுக்குப் போதுமான உதவியை, இன்டன்சிவ் கல்டிவேசன் என்று 'பாடி'யிலே செய்கிற மாதிரி, அரசு இதற்கும் செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே 205 ஆலைகள் இருக்கின்றன. தேவையான பஞ்சு 11 இலட்சம் பேல் ஆகும். அதிலே ஏறத்தாழ 3 இலட்சம் பேல்களைத் தவிர, மற்ற தேவையெல்லாம் பிற மாநிலங்களிலிருந்து, வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்றன, இறக்குமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக, நீண்ட இழைப் பருத்தி 'சுஜாதா' கோவை மாவட்டத்திலே உற்பத்தியாவதற்கு முன்னால் வெளிநாட்டிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது. கோவையிலுள்ள ஆலை முதலாளிகள், கோவையிலே உற்பத்தி செய்வதை வாங்கப் பிரியப்படாமல், வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், கோவையில் உற்பத்தியாகிற நீண்ட இழை பருத்தி 'சுஜாதா' பம்பாயிலே கட்டாவ் மில்லுக்கும் மஃபட்லால் மில்லுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுதுதான் லக்ஷ்மி மில் முதலாளிகள் சம்மதித்து, அங்கேயே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட இழைப் பருத்தியை, அதிக அளவில் உற்பத்தி செய்ய உற்சாகப்படுத்தி, அதற்கு வேண்டிய உதவிகளை அரசு கொடுத்து வருகிறது. அதன் மூலமாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது குறைவாக இருக்கும். கோவையில்தான் அதிகமாக இருக்கிறதே தவிர, மற்ற இடங்களில் இன்னும் அதிகமாக வரவில்லை.

Finance Corporation for Panchayats

* 262 *Q.*—Thiru N. DENNIS:
Thiru N. K. PALANISWAMY:— Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the Finance Corporation for the Panchayats is to be set up; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இல்லை.